செ.வெ.எண்: 06 / மார்ச் நாள்: 03.03.2016

# இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் 2016-ஆம் ஆண்டிற்கான மேல்நிலை அரசு பொதுத்தேர்வினை மொத்தம் 14,536 மாணவ மாணவியர்கள் எழுதவுள்ளனர்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

பள்ளிக் கல்வித் துறையின் மூலம் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 2016-ஆம் ஆண்டிற்கான அரசு பொதுத்தேர்வு நாளை (04.03.2016) தொடங்குகிறது. இத்தேர்வினை, இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் 3,888 மாணவர்களும், 4,633 மாணவிகளும், பரமக்குடி கல்வி மாவட்டத்தில் 2,895 மாணவர்களும், 3,120 மாணவிகளும் ஆக மொத்தம் 14,536 மாணவ, மாணவியர்கள் எழுதவுள்ளனர். இந்த மேல்நிலை பள்ளி அரசு பொதுத்தேர்வானது 04.03.2016 முதல் 01.04.2016 வரை நடைபெறவுள்ளது.

தேர்வு நடைபெறும் நாட்களில் காலை 10.00 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1.15 மணி வரை நடைபெறும். மாணவ மாணவியர்கள் வினாத்தாளை படித்துபார்க்க 10 நிமிடங்களும் விடைத்தாள் விவரங்களை பூர்த்தி செய்ய 5 நிமிடங்களும் வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் 11 மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு எழுதவுள்ளனர். அவர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு எழுதும் மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு செல்லிடப் பேசிகளை எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் 27 தேர்வு மையங்களும், பரமக்குடி கல்வி மாவட்டத்தில் 20 தேர்வு மையங்களும் ஆக மொத்தம் 47 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தேர்வு எழுதும் மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி, தேர்வு அறைகளில் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வுகளில் முறைகேடுகள் ஏதும் நடக்கா வண்ணம் முதன்மைக்கல்வி அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலர் தலைமையில் 86 நிலைத்த கண்காணிக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அதிமுக்கியம் வாய்ந்த பாடங்களுக்கு அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் குழு தேர்வு மையங்களை பார்வையிட உள்ளனர். தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை தனி வாகனங்கள் மூலம் ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்புடன் எடுத்துச் செல்ல 12 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் தேர்வு முடிந்தவுடன், தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் சிப்பங்கள், தொடர்புடைய ஆவணங்களைப் பெற்று வினாத்தாள் சேகரிப்பு மையத்தில் ஒப்படைக்கப்படும்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**